நல்லூர் பிர. நூலகம்

Registered as a Newspaper பக்கங்கள் 6 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் நாளேடு Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 8 (21.4.94) வியாழக்கிழமை ஓசை 62

## வடபகுதியில் கடமையாற்ற தமிழ்வைத்தியர் விரும்புவதில்லை

பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டம்பெற்று வெளியேறும் டாக்டர்களை ஒரு வருடம் வடக்கில் கட்டாய சேவையில் ஈடுபடுத்துவதன் மூலமே இங்கு நிலவும் டாக்டர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய முடியும் என வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் டாக்டர் எஸ். சண்முகநாதன் தெரிவித்தார். உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு முதல் தடவையாக யாழ்ப்பாணம் வந்துள்ள பணிப்பாளர் தனது நிர்வாகத்திற்குட்பட்ட பகுதிகளிலுள்ள பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராய்ந்து வருவதுடன் அவற்றிற்கான தீர்வுகளையும் மேற்கொண்டு வருகிறார். (6ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பு குண்டு வெடிப்பின் எதிரொலி

# மேற்குலக இராஜதந்திரிகள் அச்சத்தை தீர்த்துவைக்க அரசாங்கம் தீவிர முயற்சி!

## தூதுவராலய அதிகாரிகள் ஹமீட் சந்திப்பு

[கொழும்பு]

கொழும்பில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்களையும் எல்லாளன் படை, உல்லாசப் பயணிகளுக்கும் முதலீட்டாளர்களுக்கும் விடுத்துள்ள எச்சரிக்கையைத் தொடர்ந்தும் கொழும்பிலுள்ள மேற்கு நாட்டு இராஜதந்திரிகள் பலர் அச்சம் வெளியிட்டுள்ளனர். இந்நிலையில் சிறிலங்கா அரசாங்கம் அவர்களின் அச்சத்தை போக்கி உல்லாசப்பயணிகள் வருகையிலும் வெளிநாட்டு முதலீட்டின் வருகையிலும் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்கும் தீவிர முயற்சியில் இறங்கியுள்ளது. இதன் ஒருகட்டமாக சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட் மேற்குலக இராஜதந்திரிகள் பலரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

அண்மையில் கொழும்பு நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து பல மேற்கு நாட்டு இராஜதந்திரிகள் கூடி நிலைமையை ஆராய்ந்தனர். இதில் உல்லாசப் பயணிகளினதும், முதலீட்டாளர்களினதும் பாதுகாப்பு குறித்து பலத்த அச்சம் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து சிறிலங்கா வானொலி தெரிவிக்கையில் கொழும்பு குண்டுவெடிப்பு [illegible] ஹமீட் சில வெளிநாட்டு தூதரக அதிகாரிகளை சந்தித்துப் பேசினார் எனக் குறிப்பிட்டது.

மேலும் கனடா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, சுவிடன், நெதர்லாந்து, பின்லாந்து, நோர்வே, சுவிஸ்சர்லாந்து, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய தூதரகங்களின் தலைவர்கள் இதில் கலந்து [illegible]

[illegible] சில வெளிநாடுகள் அச்சம் தெரிவித்ததை குறித்து சிறிலங்கா அரசு கொண்டுள்ள கவலையை அமைச்சர் ஹமீட் இந்த வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கினார் எனவும் தெரிவித்தது.

பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத் துறை அதிகாரிகளும் இதில் பங்குபற்றியிருந்தனர்.

## தொண்டமனாறு பகுதி மீது ஆட்லறி எறிகணை வீச்சு

தொண்டமனாறு குடியிருப்புகள் மீது பலாலி இறில [illegible] நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் [illegible]

## மன்னாரில் விமானக் குண்டு வீச்சு

## 6 குண்டுகள்; 30 ரொக்கட் ஏவப்பட்டன

### ஒருவர் பலி; இருவர் காயம்

மன்னார் பெரியபண்டிவிரிச்சானில் நடந்த திங்கள் கிழமை சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர். இரு வீடுகள் சேதமுற்றன.

அன்று காலை 11மணி அளவில் மக்கள் குடியிருப்புகள் மீது இரண்டு புக்காரா விமானங்களும் ஒரு குண்டு வீச்சு விமானமும் ஆறுக்கு மேற்பட்ட குண்டுகளையும் 30க்கு மேற்பட்ட ரொக்கட் மோட்டார்களையும் வீசின.

இத் தாக்குதலினால் பனாந்து செலியர் (வயது 20, புங்குடுதீவு யாழ்ப்பாணம், தற்போதைய முகவரி சின்னப் பண்டிவிரிச்சான் மடு) என்பவர் பலியானார்.

## பனிச்சங்கேணியில் இராணுவத்தால் 56 தமிழர் வீடுகள் தீக்கிரை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டம் பனிச்சங்கேணிப் பகுதியில் கடந்த திங்கள் இராணுவத் [illegible] இச் சம்பவம் குறித்து விசாரணை மேற் கொள்ளப்படுவதாக இராணுவம் அறிவித்துள்ளது.

[illegible] விக்கப்படுகிறது.

இதேவேளை வெலிக்கந்த முகாம் நோக்கி சென்று கொண்டிருந்த சிறிலங்கா [illegible]

வானொலி தெரிவிக்கையில் கொழும்பு குண்டுவெடிப்புகளை தொடர்ந்து வெளிநாடுகளின் தூதரக அதிகாரிகள் அச்சம் தெரிவித்ததையடுத்து நேற்று வெளியுறவு அமைச்சர் ஏ.சி.எஸ்.

தலைவர்கள் இதில் கலந்து கொண்டனர். கொழும்பு குண்டு வெடிப்பு சம்பவங்களையடுத்து உல்லாசப் பிரயாணிகள் மற்றும் முதலீட்டாளர்கள் பாதுகாப்புக் குறி

தொண்டமனாறு குடியிருப்புகள் மீது பலாலி ஸ்ரீலங்கா இராணுவ முகாமிலிருந்து பலத்த ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பலாலி முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் பத்துக்கு மேற்பட்ட ஆட்லறிகள் ஏவப்பட்டு தொண்டமனாறு பகுதியின் மீது விழுந்து வெடித்தன. நேற்று காலை 7 மணியளவிலும் அப்பகுதிகளில் ஆட்லறிஷெல் விழுந்து வெடித்தது.

மற்றும் கடற்படையினரின் தாக்குதல்களும் நேற்று அதிகாலை நடைபெற்றது. பருத்தித்துறை, வல்வெட்டித்துறை கடற்பரப்பில் ரோந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

# நெடுங்கேணியில் புலிகள் தாக்குதல் 2 ராணுவத்தினர் பலி; ஆயுதம் மீட்பு

## கப்டன் மறவன் வீரச்சாவு

(மணலாறு)

நெடுங்கேணிப் பிரதேசத்தில் நேற்றுக்காலை சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் இரண்டுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன; இம் மோதலில் ஒரு விடுதலைப் புலிகள் போராளி வீரச்சாவு அடைந்தார்;

நெடுங்கேணிப் பிரதேச முகாமிலிருந்து 20 சிறிலங்கா இராணுவத்தினரும், ஆரியகுண்டான் முகாமிலிருந்து 10 இராணுவத்தினரும் தடைகளை அகற்றிக்கொண்டு வந்த இவ் இரு இராணுவக் குழுக்களும் சந்தித்த இடத்தில் வைத்து பதுங்கியிருந்த புலிகளால் திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது;

இத் தாக்குதல் 15 நிமிட நேரம் நடத்தப்பட்டது. இத் தாக்குதலின்போது இரண்டுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர்; இவர்களிடமிருந்து;

- ரி-56-1 ரக துப்பாக்கி - 01
- ரவைக்கூடுகள் - 02
- நடுத்தர ரவைகள் - 46
- குண்டு - 03
- ஏகே கோல்சர் - 01

என்பன கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலின்போது கப்டன் மறவன்(விசு (பூபால

(6 ஆம் பக்கம் பார்க்க)



# புதிய தரையிறக்கும் கப்பல் இன்று கடற்படையில் இணைவு

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படைக்காக கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட தரையிறக்கும் கப்பல் இன்று உத்தியோக பூர்வமாக சேவைக்கு விடப்படுகிறது; இந் நிறுவனத்தால் 1992இல் கடற்படைக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட தரையிறக்கு கப்பல் ஒன்று ஏற்கனவே கடற்படையினரின் பாவனையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ் வைபவத்தில் கடற்படைத் தளபதி மோகான் சமரசேகரவும் கலந்துகொள்வார்; ஒரு வாரத்தினுள் இக் கப்பல் கடற்படையினால் சேவையிலீடுபடுத்தப்படும் 11 கோடி 80லட்சம் ரூபா செலவில் இத் தரையிறக்கு கப்பல் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது;

## மேதின கருத்தரங்கு

யாழ்ப்பாண மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் 1994-ம் ஆண்டின் ''மே'' தினம் சம்பந்தமான அதிமுக்கிய கருத்தரங்கும் ஆலோசனைக் கூட்டம் ஒன்றையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாண இந்துக்கல்லூரிகுமாரசுவாமி கேட்போர் மண்டபத்தில் நடாத்தவிருக்கிறதாம். மேற்படி கூட்டத்தில் தொழிற்சங்கங்கள், அரசசார்பற்ற பொதுநிறுவனங்களின்தொழி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வஜன வாக்கெடுப்பு ஒத்திவைப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்து வடக்கிலும் கிழக்கிலும் நடைபெறவிருந்த பொதுஜனவாக்கெடுப்பு மீண்டும் பிற்போடப்பட்டுள்ளது

ஜனாதிபதியின் பிரகடனம் ஒன்றின்படி பொதுஜன வாக்கெடுப்பு கிழக்கில் இவ்வருடம் மே 26 இல் நடைபெறுமென்றும் வடக்கில் 14 ஜூலையில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்

(6ஆம் பக்கம் பார்க்க)

பணிச்சங்கேணிப் பகுதியில் கடந்த திங்கள் இராணுவத்தினர் தீக்கிரையாக்கிய தமிழர்களின் வீடுகளின் எண்ணிக்கை 56 ஆக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது;

மேற் கொள்ளப்படுவதாக இராணுவம் அறிவித்துள்ளது;

வீடுகளை தீக்கிரையாக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய சில படையினர் கைதாகியுள்ளதாகவும் தெரி

இதேவேளை வெலிக்கந்த முகாம் நோக்கி சென்றுகொண்டிருந்த சிறிலங்கா படையினர் மீது இப் பகுதியில் வைத்து கண்ணிவெடித் தாக்குதல் நடாத்தப்பட்டதா

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புத்தளம் தமிழரை வெளியேற்ற படையினர் பெருமுயற்சி

(மன்னார்)

மன்னார் கற்பிட்டி பகுதி புதிய சிங்களக் குடியேற்றப் பிரதேசமாக மாறி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்பகுதிக்கு வெளியார் செல்வதையோ அன்றி பத்திரிகையாளரோ, அரச சார்பற்ற நிறுவனபிரதிநிதிகளோ செல்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாகவும்இல குறிப்பிட்ட பகுதியில் உள்ள தமிழர்களை வெளியேறுமாறு சிறிலங்கா கடற்படையினர் மற்றும் சிறிலங்கா பொலிசார் வற்புறுத்தி வருவதாகவும் தெரிய வருகின்றது;

கிரிமுந்தல் என்னும் பகுதியில் தற்போது சுமார் நூற்றிஐம்பதிற்கு மேற்பட்ட தமிழ்க்குடும்பங்கள் வாழ்வதாகவும் அவர்களை இப்பகுதியை விட்டு வெளியேறுமாறு பல வந்தப்படுத்திக்கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது;

இதேவேளை பத்தளம் குண்டு, கண்டேன் குண்டு, சுத்தகுழி, குதிரைமலை பகுதியில் வாழ்ந்த தமிழ்க்குடும்பங்கள் இப்பகுதியை விட்டு வெளியேறி நீர்கொழும்பு, குடாபாடு பகுதிகளில் வாழ்ந்து வருவதாகவும் கூறப்படு

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் மீதான தடையை நீடிக்க தமிழக சட்டசபையில் தீர்மானம்

(சென்னை)

விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் இரு வருடங்கள் நீடிக்குமாறு மத்திய அரசை கோரும் தீர்மானம் நேற்று தமிழக சட்டப் பேரவையில் கொண்டுவரப்பட்டது; இத் தீர்மானத்தை முதலமைச்சர் ஜெயலலிதா முன்மொழிந்தார்; ஜெயலலிதாவின் உரையைதொடர்ந்து தீர்மானம் சபையில் நிறைவேறியது.

இதனை முன்மொழிந்து பேசிய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தற்போது தமிழ் நாட்டில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை முற்றிலுமாக கட்டுப்படுத்தி உள்ளதாகவும் ஆனால் அண்டை மாநிலங்களிலிருந்து அவர்கள் தொழிற்படுவதைத் தடுப்பதற்காகவே இந்தத் தடையை நீடிக்க வற்புறுத்துவதாகவும் குறிப்பிட்டார்; தமிழக அரசே இது தொடர்பாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கோபாலசாமி ஆதரவாளர் கொலை; விசாரிக்க தனியான காவல் குழு

வை. கோபாலசாமியின் அணியைச் சேர்ந்த சென்னைப் பொறுப்பாளர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டது குறித்து வழக்கு மேல்விசாரணைக்காக சென்னை மாநகர மத்திய குற்றத்துறை பிரிவுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது; விசாரணைகளை மேற்கொள்ள தனியான காவல் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

# வரி விளம்பரம்


**துளிர்**

தமிழ் நாடு புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் விற்பனையாகிறது. வசந்தம் புத்தக நிலையம் சந்தா ஏற்றுக் கொள்ளப்படும். (8085)

**தூக்கு மேடைக் குறிப்பு**

பேர்லினில் தூக்கிலிடப்பட்ட ஜூலியஸ் பூசிக் சிறையிலிருந்த போது எழுதப்பட்ட சிறைக்குறிப்புகள் விற்பனையாகிறது - வசந்தம் புத்தக நிலையம் (8086)

**வேட்டுக்குஞ்சு விற்பனை**

லைலைன் பிறவுன் 1 1/2 மாதம் வளர்ச்சியடைந்த பேடுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகா பதி", சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (8105)

**கோல்டன் கொமட் விற்பனை**

கோல்டன் கொமட் 10 நாட்கள் வளர்ச்சியடைந்த பேட்டுக்குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (8106)


## செயலக புனர்வாழ்வு பிரிவு 2 மாதங்களில் புனரமைப்பு

(நமது நிருபர்)

யாழ் செயலக மேல்மாடியில் இயங்கி வந்த பிரிவுகள் இன்னும் இரு மாதங்களில் பழைய இடத்தில் இயங்கும் என செயலக வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

கடந்த வருட பிற்பகுதியில் சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்களின் தாக்குதலுக்கு இலக்காகி மேற்படி கட்டடம் பலத்த சேதத்திற்குள்ளாகியதும், இதனால் மேல்மாடியில் இயங்கி வந்த புனர் வாழ்வுப் பகுதி உட்பட அனைத்து பகுதிகளும் தனியார் கட்டடங்களில் இயங்கி வருவதும் தெரிந்ததே.

தற்போது இக்கட்டடத்தின் இறுதி கட்டவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் இவை இன்னும் இரு மாதங்களுக்குள் பூர்த்தியாக்கப்பட்டு செயலகத்திடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. நிர்மாணத்திணைக்கள பதில் பிரதம பொறியியலாளரும் நிறைவேற்று பொறியியலாளருமான திரு. சுந்தரபாலன் மேற்பார்வையில் மேற்படி திருத்த வேலைகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ச)

## கப்பல் கட்டண அதிகரிப்பு; உரவிலையில் மாற்றம்

(நமது நிருபர்)

யாழ் குடாநாட்டிற்கு கொழும்பிலிருந்து கொண்டுவரப்படும் பொருட்களுக்கான கப்பல் கட்டணம் அதிகரித்துவருவதைத் தொடர்ந்து விவசாய உள்ளீடுகளின் விலைகளை அதிகரிப்பதென யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் கமநல சேவை உத்தியோகத்தர், கூட்டுறவு சமாசங்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய பிரதிநிதிகள் மற்றும் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது கப்பல் கட்டணம் மெற்றிக் தொன்னுக்கு 3500 ரூபாவாக இருக்கும் பட்சத்தில் அதிக் கொண்டுவரப்படும் உரவகைகளை பின்வரும் அதிகரித்த விலைக்கு விவசாயிகளுக்கு விற்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

| உரவகை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| அமோனியா | 570 | 640 |
| ரி. டி. எம். | 610 | 675 |
| ரி. எஸ். பி. | 735 | 775 |
| எம் ஓ பி | 695 | 730 |

(ச)

## தடியால் தாக்கி காயம்; 2000 ரூபா அபராதம் விதிப்பு

(வடமராட்சி)

தடியால் அடித்து காயம் ஏற்படுத்திய குற்றத்திற்காக நபர் ஒருவருக்கு பருத்தித்துறை நீதியாளர் பிரதிபா 2 ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்துமாறு கட்டளையிட்டுள்ளார்.

பருத்தித்துறை காவல்துறை பிரிவால் தாக்கல் செய்யப்பட்ட இவ் வழக்கில் தன்னாலையைச் சேர்ந்த ஒருவருக்கு அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர் தடியால் அடித்துக் காயம் ஏற்படுத்தியிருந்தார். (வேர)

## ஏறாவூர் பிரதேச சபை தலைவரை கொல்ல முயற்சி

(கொழும்பு)

ஏறாவூர் பிரதேச சபைத் தலைவரைச் சுட்டு கொலை செய்ய முயன்ற துப்பாக்கி நபர்கள் இருவர் சிறிலங்கா பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட துப்பாக்கி நபர்கள் இருவரும் முஸ்லிம் அமைப்பொன்றைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் கொடுத்த மேலதிக தகவலைத் தொடர்ந்து துப்பாக்கிகளும், வெடி குண்டுகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உறவினர் குழந்தைகளுடன் சுவிஸ் சென்றவர் கைது

(கொழும்பு)

வேலணையைச் சேர்ந்த பால சிங்கம் மகேந்திர ராஜா கனடாவிலிருந்து வந்து கடந்த வருட முற்பகுதியில் கொழும்பில் தங்கியிருந்த ஐந்து வயது மூன்று வயதுடைய இரு குழந்தைகளுடன் சுவிஸ் திரும்ப முயன்றபோது குடிவரவு அதிகாரிகளிடம் சிக்கினார்.

இவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் இவர் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டு விடுதலைசெய்யப்பட்டார் இவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கூறுகையில் குற்றஞ்சாட்டப்பட்டவர் பிள்ளைகள் சுவிஸ் வதிவிடமாகக் கொண்டவர் அங்கேயே பணியாற்றுபவர் மனைவி பிள்ளைகளும் அங்கேயே வசிக்கின்றனர் இவர் உடனடியாக சுவிஸ் திரும்பாவிடின் வேலையை இழக்கும் அபாயம் உள்ளது இப்பிள்ளைகளை இவர் பணத்திற்காக கொண்டு செல்லவில்லை கற்போதைய நெருக்கடியில் வேலணையில் வேதனையால் வாடிய உறவினர்களான இந்த சிறுவர்களை அவர் தம்முடன் அழைத்துச் செல்ல முயன்றுள்ளார் தமது கடவுச்சீட்டில் சிறுவர்களின் பெயர்களை சட்டவிரோதமாக பதிவு செய்த குற்றச்சாட்டை சுமத்த முடியும் என்று கேட்டுக் கொண்டார்

## தனியாக கட்டடம்

(யாழ்ப்பாணம்)

நவாலி மயூரன் குடியிருப்பில் இயங்கும் சிறுவர்போசாக்கு பராமரிப்பு பூமிகாவில் சுமார் 75ற்கு மேற்பட்ட சிறார்கள் உள்ளதாகவும், தம்மால் நிர்வகிக்கப்பட்டு வரும் இப்பூமிகாவிற்கென விரைவில் தனியான கட்டடம் ஒன்று பெறப்படவுள்ளதாகவும் விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் திவகம் கோட்ட உதவிப்பொறுப்பாளர் செல்வி இளவரசி தெரிவித்துள்ளார் (22)

## சுற்றுப்போட்டி

(பருத்தித்துறை)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக்கழகம் 11பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை ஆரம்பித்துள்ளது. 11 ஆம் திகதி ஆரம்பமான இவ் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது இவ் உதைபந்தாட்ட

## நரேமா நாளை புறப்படுகிறது

நாளை புறப்படவிருக்கும் நரேமா கப்பலில் பயணம் செய்வதற்கு செயலகத்தில் பணம் செலுத்திய பயணிகள் நாளை நண்பகல் 12.00மணியளவில் பருத்தித்துறை இறங்கு துறைக்கு சமுகமளிக்கும்படி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பணம் செலுத்தத் தவறிய எவரும் எக்காரணம் கொண்டும் பயணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்

## காங்கேசன் சீமெந்து ஆலை ஊழியர் கௌரவிப்பு

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் 1992ம் ஆண்டுடன் 25 வருடங்கள் சேவையாற்றிய ஊழியர்களுக்குக் கூட்டுத்தாபனச் சின்னம் பொறிக்கப்பட்ட பதக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலைத் தற்காலிக காரியாலயத்தில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகரால் வழங்கி கௌரவிக்கப்படும்.

## பட்டபின்படிப்பு டிப்ளோமா நேர்முகப் பரீட்சை

தேசிய கல்வி நிறுவனத்தால் யாழ் மாவட்டத்தில் நடத்தப்படும் 1994/95க்கான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பயிற்சிக்கு விண்ணப்பித்த யாழ் வலயம் 1 இல் அமைந்த பாடசாலைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 28ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் விண்ணப்பதாரிகள் உரிய நேரத்துக்குத் தேவையான ஆவணங்களுடன் வருகை தருமாறு யாழ்ப்பாணம் வலயம் 1இன் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## அஞ்சலிக் கூட்டம்

(குருநகர்)

மறைந்த எழுத்தாளர் டானியல் அன்ரனியின் நினைவஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும்.

"நந்தி" தலைமையில் நடைபெறும் அஞ்சலிக் கூட்டத்தில் கலாநிதி சோ. கிருஷ்ணராசா, செம்பை ஆழியான். திரு. க. தணிகாசலம் ஆகியோர் நினைவுரைகள் நிகழ்த்துவர். (21)

## கையெழுத்துப் பிரதி

(யாழ்ப்பாணம்)

சமகால நிகழ்வுகளை எடுத்துக் கூறும் வகையிலும் போராட்டமும் கல்வியும் வாழ்க்கையின் முதன்மைத் தேவைகள் என்பதை விளக்கும் வகையிலும் அமைந்த ஆக்கங்களை உள்ளடக்கிய கையெழுத்துப் பிரதி ஒன்று திவக கோட்ட மட்டத்தில் வெளியிடப்படவுள்ளது. திவக கோட்ட பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களையே அடிப்படையாகக் கொண்ட இக் கையெழுத்துப் பிரதி 2ம் தவணை பாடசாலைகள் ஆரம்பமானவுடன் வெளியிடப்படும் என விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவின் திவகக் கோட்டப் பொறுப்பாளர் செல்வி வினோ எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். (22)

## போராட்டத்தின் ஓர் அம்சம் அன்னைபூபதி

### நினைவுக் கூட்டத்தில் உரை

(குருநகர்)

"இம்மண்ணிலே ஒவ்வொரு குடும்பமும் உரிமையுடனும், மகிழ்ச்சியுடனும் வாழவேண்டும் என்ற எமது இயக்கத்தின் போராட்டத்தை விளங்கிக்கொண்ட காரணத்தால் தான் தன்னுயிர் துறக்கின்ற உன்னத மகத்தான செயலை அன்னை பூபதி இம்மண்ணின் விழுமியமாக அந்நியப்படையினருக்கு எடுத்துக்காட்டினார்"

ஈகச்சுடர் பூபதி அன்னையின் ஆறாம் ஆண்டு நினைவுத் தொடரின் இறுதி நாளான கடந்த 19-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் குருநகர் சவுக்கார்மல் மண்டபத்தில் நடைபெற்ற நினை

மக்கள் பார்வைக்குக் காட்டப்பட்டன

அஞ்சலி நிகழ்வின் ஆரம்பத்தில் வலிகிழக்கு கடற்புலிகள் அரசியல் நிர்வாக உதவிப் பொறுப்பாளர் திரு சதீஷ் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றினார்

குருநகர் வர்த்தக சங்கத் தலைவர் திரு.செபமாலை அல் போன்ஸ் மங்கள விளக்கேற்றினார்

தமிழீழ கடற்புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு தமிழ்மாறன் தொடர்ந்து பேசுகையில்

"பூபதி அம்மா தமிழீழமக்களின வாழ்வுக்கான ஒரு போராட்டத்தில் அம்சமா

## மெய்வல்லுநர் சட்டவிதிகள் கருத்தரங்கு

கழகங்களின்பிரதிநிதிகளுக்காக யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் நடத்திவரும் மெய்வல்லுநர் சட்டவிதிகள் பற்றிய கருத்தரங்குத் தொடரின் இவ்வார விரிவுரைகள் எதிர்வரும்சனிக்கிழமை (23-04-1994) காலை 9 மணிமுதல் யாழ் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

## பரீட்சை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நடத்தப்படும் புத்தகப் பதிவாளர் நியமனத்திற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ் வேம்படி மகளிர் கல்லூரியிலும் யாழ்.


**பாலை தீராந்தி : பனைமரம் விற்பனைக்கு**

| | | |
|---|---|---|
| பாலைத் தீராந்தி | 6''X3''-12 அடி |
| " | 6''X2''-12 அடி |
| | 5''X2''-12 அடி |
| | 4''x3''-10 அடி |
| பனை மரம் | 12 முழம்தொடக்கம் 6 முழம்வரை மொத்தம் 600 முழம் |
| சிலாகை | 800 முழம் |

தொடர்பு:

**பைந்தமிழ் வெதுப்பகம் (பேக்கரி)**

உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பாக பிரதான வீதி. சாவகச்சேரி. (8109)



**சாவகச்சேரி மக்களுக்கு ஓர் நற்செய்தி**

18-4-1994-ல் மங்களகரமாக ஆரம்பித்

10 மணிக்கு யாழ் வேம்படி மகளிர் கல்லூரியிலும் யாழ் மத்திய கல்லூரியிலும் நடைபெறும்.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் தேசிய விடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.


## தேன் வேண்டுமா?

❋ தேனீக்களை நீங்களே வீடுகளில் வளர்க்கலாம்

❋ தேவையான தேனை பெற்றுக் கொள்ளலாம்

வளர்ப்பதற்கேற்ற

- தேனீ பெட்டிகளை
- குடிகளுடனும்
- இராணித் தகட்டுடனும்

பெற்றுக்கொள்ள

தொடர்பு கொள்ள வேண்டிய இடம்.

விவசாயப்பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தாவடி.

(இ-9215)



18-4 1994-ல் மங்களகரமாக ஆரம்பிக்கப்பட்டு தரமான, சுவையான, சுகாதாரமான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும்.

புதிய நிலையம்

## பைந்தமிழ் வெதுப்பகம்

[பேக்கரி]

உதவி அரசாங்க அதிபர் பணிமனை
(முன்பாக)
பிரதான வீதி, சாவகச்சேரி.

(8108)



## இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழிகள் எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளவும், உங்கள் கோழிகளை சந்தைப் படுத்தவும்.

சிறந்த இடம்

## சுவையருவி
### கோழிப்பண்ணை

லெப். கேணல் இராசன் தெரு
யாழ்ப்பாணம்.

(இ-9216)



ஏபரல் 23 யாழோசை மன்றத்தினர் வழங்கும் ஏபரல் 24

மாபெரும் இசை நிகழ்வு

## செந்தமிழ் பாட்டு II

விரைவில் எதிர்பாருங்கள்

(இ-9175)


...த்தில் நடைபெற்று வருகின்றது இவ் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 24 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றுகின்றன. (25)

...டும் பயணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் அரசாங்க அதிபர் மேலும் கூறியுள்ளார்.

# காமினி . கூரே பிளவு கட்சியை சிதைக்கும்

## ஐதேக உறுப்பினர் கூறுகின்றனர்

ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா இருந்தபோதும் ஜனாதிபதி தனது சுய விருப்பத்தின் பெயரில் செயற்படமுடியாத நிலை தோன்றியிருப்பதாக மேற்படி கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் சிலர் செய்தி நிறுவனம் ஒன்றிற்குத் தெரிவித்துள்ளனர்

எனவே காமினியை கட்சிக்குள் கொண்டு வருவது தொடர்பாக தொடர்ந்து சிறிசேனகூரே முட்டுக்கட்டை போட்டால் சிறிசேனகூரேக்கு எதிரான ஒரு விதிதியாசமான முடிவொன்றை ஜனாதிபதி எடுக்கவேண்டிவரும் என அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்

இவ்வாறான ஒரு நிலை ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டால் கட்சி மேலும் தனது பலத்தை பெரிய அளவில் இழக்க வேண்டி வருவதுடன் அடுத்து வரும் தேர்தலில் படுதோல்வியைச் சந்திக்க வேண்டி வரும் எனவும் அவ் உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்

இந்நிலையில் சிறிசேனகூரேயின் முடிவிலேயே ஐக்கியதேசியக் கட்சியின் செல்வாக்கு தங்கியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது

# பண்டிதர் குடியிருப்பில் நோய் தீவிரம் குறைகிறது

(யாழ்ப்பாணம்)

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் தொற்று நோய்களின் கொடூரம் தற்போது தணிந்துள்ளதாக தெரிய வருகின்றது. தொற்று நோய்களை கட்டுப்படுத்தவென குடியிருப்பில் விடுதலைப் புலிகளின் தென்மராட்சி அரசியல் துறையினர், மகளிர் அமைப்பினர், மாணவர் அமைப்பினர், நடமாடும் மருத்துவ சேவையினர், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் ஆகியோர் இணைந்து கடந்த சில வாரங்களாக மேற்கொண்டு வரும் வேலைத் திட்டங்களினாலேயே தொற்றுநோய்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. பகலில் குடியிருப்பு சுத்தமாக்கப்பட்டு சுகாதாரம் பேணப்படுவதோடு இரவில் சுகாதார கருத்தரங்குகள் நடாத்தப்படுவதாகவும் தெரியவருகின்றது. (32)

## ஆதாரம் காட்டி பெறவும்

காணி உறுதிகள் சிலக, கந்தசாமி என்பவரால் அரியாலை பூதர் கோவிலருகில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்

குருநகர் ஜவுன்டாரிமல் மண்டபத்தில் நடைபெற்ற நினைவுக் கூட்டத்தில் கலந்துரையாடல் கடற்புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்மாறன் (மூர்த்தி) மேற்கண்டவாறு தெரிவித்தார்

குருநகர் வெகுஜன அமைப்புகள் ஒழுங்கு செய்திருந்த நினைவுக் கூட்டத்திற்கு முன்பாக அன்னை பூபதி பற்றிய ஒளிப்படம், தாயகக் கனவு, ஒவி வீச்சு ஆகியன பொது...

...களின் வாழ்வுக்கான ஒரு போராட்டத்தில் அம்சமாகவே விளங்குகிறார் இதைத் தமிழீழ மக்கள் விளராகப் புரிந்து கொள்ளும்போதுதான் எமது மண்ணில் விளைந்துள்ள துன்பங்களும் விரைவாக நீங்கும். இதைப்புரிந்துகொள்வது தாமதமானால் எமது இன்பமான வாழ்வும் தாமதமாகவே இருக்கும்'' என்றார் மாவீரர்பணிமனைப் பொறுப்பாளர் திரு பொன் தியாகம் உரை நிகழ்த்தினார். (21)


# நினைவு கூருகின்றோம்...

## 1994-04-21

1986-ம் ஆண்டு இதேதினத்தில் மட்டு - கும்பிமலை பள்ளத்துச்சேனைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**நிர்மலன்** (குணரத்தினம் தனபாலசிங்கம் - ரீசிகுவாட்டஸ், ஏறாவூர் - 04, மட்டு)

1988-ம் ஆண்டு யாழ் - தொண்டமனாறு - மயிலியதனைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். தும்புக்கிளி** (மாணிக்கம் பாலச்சந்திரன் - மயிலியதனை, தொண்டமனாறு)

1989-ம் ஆண்டு சுழிபுரம் - பண்ணாகம் பகுதியில் வீட்டுக்குள் புகுந்த இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்.

1993-ம் ஆண்டு மட்டு - சந்திவெளி, பாலையடித்தோணாவில் பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய,

**சிவக்கணேஸ் / ராஜி** (நாகலிங்கம் பாஸ்கரன் - சந்திவெளி - மட்டு)

இதே சம்பவத்தில் கொல்லப்பட்ட ஆதரவாளர், (சுரேஸ்பிள்ளை சுரேந்திரன் - சந்திவெளி - மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(இ 9207)



## செல்வி சு. தாரணி

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவபாக்கியம் தம்பதிகளின் செல்வப் புதல்வி தாரணி தனது 2 ஆவது பிறந்தநாளை இன்று [21.04.94] தனது இல்லத்தில் குதூகலமாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, சுரேஸ் அண்ணா (France), கண்ணன் அண்ணா, சுஜித்தா அக்கா, றமேஸ் அண்ணா, கொழும்பு வசந்தி அண்ணி, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், உற்றார், உறவினர், நண்பர்கள், பல்கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

சுரேசன் றோம
கோண்டாவில் மேற்கு
கோண்டாவில்.

(8100)

சமுகமளிக்குமாறு தமிழீழ நீதி நிர்வாகத்துறையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

ளுள்ளது. இரிக்கம் ஆழுவெல்லிருக்கு ஆயுதம் தாங்கிய பொலிஸ் பாதுகாப்பு வழங்கி

## செஞ்சிலுவை பணியகற்ற மன்னாரில் மக்கள் தயக்கம்

(கொழும்பு)

இடைக்கால கமிட்டியொன்றை அமைத்து அதன் மூலம் மீண்டும் செஞ்சிலுவைச்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள மன்னார் இளைஞர் எடுத்த நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை எனத் தெரியவருகிறது. இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தீவுப் பகுதியில் செஞ்சிலுவைச் சங்கப் பணிகளை மேற்கொள்ள பலரும் அச்சம் தெரிவித்து வருவதே இதற்குக்காரணமாகும்.

மன்னார் தீவுப் பகுதியில் இராணுவத்தின் கெடுபிடி நடவடிக்கைகள் அதிகரித்து வருவதுடன், படையினரால் கைது செய்யப்பட்ட செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்பது தெரிந்ததே. வழக்குகள் எதுவும் தாக்கல் செய்யாமல் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் அல்லது வழக்கு தாக்கல்செய்யப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள செஞ்சிலுவைச்சங்க மன்னார் கிளையின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை மன்னார் மாவட்ட கத்தோலிக்க ஆயர் சென்று பார்வையிட்டார். இவர்கள் மிகவும் மனம் குழம்பிய நிலையில் காணப்படுவதாகவும், இவர்கள் மீது சித்திரவதை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் மன்னார் ஆயர் தெரிவித்துள்ளார்.

மேலும் செஞ்சிலுவைச் சங்க ஊழியர்கள் பயணம் செய்த வாகனத்தின் சாரதி மட்டும் அண்மையில் படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி,ம)

## துரித அபிவிருத்திக்கு திட்டம் 113 கோடி ரூபா ஒதுக்கீடு

### டி.பி. விஜேதுங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

துரித அபிவிருத்தியின் திட்டத்திற்கு நூற்றிப்பதின் மூன்று கோடி ரூபா ஒதுக்கியிருப்பதாக ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

இவ்வருட இறுதிக்கு முன்னர் மேற்படி திட்டம் நிறைவு செய்யப்பட வேண்டும் என்றும் இதனை 'பதினைந்து அம்ச திட்டம்' என பெயரிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் துரித அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இதனை செய்வதாகவும் இதற்கு தேவையான நிதிக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் எனவே சகல உயர்அதிகாரிகளின் நேரடியான கண்காணிப்பின் கீழ் இத் திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் உடனடியாக இத்திட்ட அறிக்கைகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்ப வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை இது தேர்தலுக்கான ஒரு திட்டம் என அரசியல் அவதானிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

லேயே இப்பாதுகாப்பு வழங்கப்பட்டதாகஇரிக்கம் கட்டுப்பாட்டு சபையின் செயலாளர் நெவில் பெரேரா தெரிவித்தார்.

ஏப்ரல் 18ஆம் திகதி அதிகாலை ஒரு மணியளவில் ரெலசாக் மகாநாம தலைமையிலான இரிக்கம் அணி கட்டுநாயக்காவிலிருந்து புறப்பட்டுச் சென்றது தெரிந்ததே. இதேவேளை இவ் அணியினர் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னதாக கொழும்பு காலி முகத்திடலில் அர்ஜுனா மற்றும் அரவிந்த டி. சில்வாவின் ஆதரவாளர்களான நூற்றுக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம் நடாத்தியது குறிப்பிடத்தக்கது.

---

### அலங்கார உற்சவம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோவிலின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் விசேட அபிஷேகம், பூசை வழிபாடு ஆராதனையுடன் நடைபெறுகின்றது.

எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு விசேட 108 சங்காபிஷேகமும், பூசைஆராதனை வழிபாட்டுடன் இடம்பெறும்.

நண்பகல் 12.00 மணிக்கு ஊஞ்சல் பாடலை அடுத்து அம்பாள் வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கவுள்ளார். (24)

### கண்டெடுப்பு

வல்லி பொன்னையா, இராமச்சந்திரன் தங்கம்மா, தம்பிராசா ஸ்ரீதரதேவன், நாகலிங்கம் இராசன், கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் என்பவர்களுடைய அடையாள அட்டைகள் கொக்குவிலில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதற்குரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ/து)
சுன்னாகம்

## வங்கிச் சேவைகள் முகாமையாளர்

கு. இல: 111:07

மேற்படி பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளத்திட்டம்: ரூ 1105 – 2170/- / 60 X 4: 75 X 11

இத்துடன் சமகாலத்தில் வழங்கப்படும் சகல அலவன்சுகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமை:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 8-வது சம்பளத் திட்டத்தில் 1005 – 1705/- / 40 X 5:50 X 10
அத்துறையில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் மூன்று வருடங்களுக்கு குறையாத அநுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 9-வது சம்பளத்திட்டத்தில் 905/- – 1605/- / 40 X 5:50 X 10
அத்துறையில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவம், அல்லது,

ஆ) இலங்கை வங்கிச் சேவை நிறுவனத்தின் டிப்ளோமா பரீட்சையில் பகுதி I-ல் சித்தியுடன் வர்த்தக வங்கித் தொழிலில் இரு வருடங்களுக்கு குறையாத அனுபவமும், அல்லது,

இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரி அல்லது அதற்கிணையான தகைமைகளுடன் வர்த்தக வங்கித் தொழிலில் இரு வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது,

ஈ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் 03 பாடங்களிலான சித்தியுடன் வங்கித் துறையில் மேற்பார்வை மட்டப் பதவியில் ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவமும்.

வயது: விண்ணப்ப முடிவு திகதியன்று 23 வயதுக்கு குறையாமலும், 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பிணை: உரொக்கப் பிணை- ரூ 4,420/-
ஆதனப் பிணை- ரூ 15,000/-

விண்ணப்ப முடிவு திகதி: 5 - 5 - 94

விண்ணப்பப்படிவத்தையும் ஏனைய மேலதிக விபரங்களையும் ரூ 10/- செலுத்தி சங்க வேலை நாட்களில் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம், பொது முகாமையாளர்
சுன்னாகம்.

(இ-9209)

# புதிய சாதனைகளைப் படைத்து எமது போராட்டம் முன்னேறுகிறது

## : இளம்பரிதி

(தென்மராட்சி)

எமது போராட்டம் உலகத்தில் ஒரு கோட்பாட்டினையும், அடித்தளத்தினையும், சரித்திரத்தினையும், சாதனைகளையும், புதுமைகளையும் ஏற்படுத்தியுள்ளது. காலப் போக்கில் உலக அரங்கில் நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் போது அதில் எமது தமிழீழமும் ஒன்றாக அமையும். இவ்வாறு நேற்று முன்தினம் மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் நடைபெற்ற தியாகதீபம் அன்னைபூபதி யம்மாவின் ஆறாம் ஆண்டு நினைவுப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியயாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

சாவகச்சேரி வட்டப்பொறுப்பாளர் பொற்கோ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில், உலக அரங்கில் எத்தனையோ நாடுகளில் போராட்டம் நடைபெறுகிறது. நாம் வேறு எந்த சக்தியையும் நம்பாமல் எமது சொந்தப் பலத்தில் தங்கி நின்று போராட்டத்தை நடத்துகின்றோம். இத்தியாகத்தை மட்டும் நம்பியிருந்திருந்தால் இன்று போராட்டத்தின் அடித்தளம் இருந்திருக்குமா? இந்திய படை ஒரு காலகட்டத்தில் எமது தலைவரை அழிப்பதற்கும், கைது செய்வதற்கும் பல முயற்சிகள் எடுத்தது. இதில் முதலாவதாக தலைவர் யாழ்ப்பாணத்தில் இருப்பதாகக் கூறி. யாழ். பல்கலைக்கழகத்தில் உலங்கு வானூர்தியில் இந்தியத் துருப்புகள் இறக்கப்பட்டன. எதற்கும் தயாரான மன உறுதியோடு எமது போராளிகள் எதிர்த் தாக்குதல் நடத்தினர். படையைச் சின்னாபின்னமாக்கினர். அதே போலத்தான் அன்னை பூபதியும், தளராத உறுதியோடும், தாய்நாட்டின் மீது கொண்ட பாசத்தாலும் தமிழீழ வரலாற்றில் பதிவாகியுள்ளார். இவரது சாவு தமிழீழ மக்கள் மத்தியில் ஒரு உந்து சக்தியாக விளங்கியது.

எதிரி தற்போதைய நிலையில் பெரும் தோல்விகளைச் சந்தித்து வருகின்றான். ஆனாலும் வடக்கு, கிழக்கு பகுதியில் ஒரு இறுதிப் போரை நடத்தி தனது பதவியைக் காப்பாற்ற முயற்சிக்கின்றான். எதிரியை வெற்றி கொள்ள எமக்கு ஆட்பலம் தேவை எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகமும் உரையாற்றினார். (86)

# மேலும் இரு நோயாளிகள் செப்டிசீமியாவினால் சாவு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று மாலையுடன் முடிவடைந்த நாற்பத்தியெட்டு மணித்தியாலயத்தில் இருவர் செப்டிசீமிய நோய் நிலையினால் மரணம் அடைந்துள்ளதாக தெரியவருகின்றது.

செப்டிசீமியா ஏற்படுவதற்கான காரணம் நோய்மேலும் கண்டுபிடிக்கப்பட முடியாமல் இருப்பதாகவும் இதுபல நோய்களின் விளைவால் ஏற்படும் இறுதி நிலை இது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (நி) (க)

# சிரமதானம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வட்டலை ஒழுங்கு செய்த அன்னைபூபதி ஞாபகார்த்த சிரமதானம் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றது. இச்சிரமதான நடவடிக்கைகளில் பருத்தித்துறை வணிகர்சங்கம், புலோலி வணிகர் சங்கம், வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம், புலோலி தையல் பயிற்சி நிலையம், பருத்தித்துறை நகரசபை ஆகிய நிறுவனங்களின் உறுப்பினர்கள் ஈடுபட்டனர். (52)

# யாழ். பொது நூலகத்தில் போட்டோ பிரதி வசதி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை பொது நூலகத்திற்கு போட்டோ பிரதி கருவி வசதியை யாழ் மாநகரசபை ஏற்படுத்தியிருக்கின்றது.

இப் போட்டோ பிரதிகருவி கடந்த மாதம் தொடக்கம் யாழ் மாநகரசபை நூலகத்தில் தொழிற்பட்டுவருகின்றது.

யாழ் மாநகரசபை நூலகத்திற்கு வருகின்ற வாசகர்களின் நன்மை கருதி இவ்வசதியை மேற்கொண்டிருப்பதாக யாழ் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் இதுபற்றி அவ்வட்டாரங்கள் தெரிவிக்கையில் வாசகர்களுக்குத் தேவையான சில குறிப்புகள், கட்டுரைகள் மற்றும் படங்கள் போன்றவற்றை நூல்களில் இருந்து போட்டோ பிரதி பெற்றுச் சென்று மாணவர் தமது கல்வியறிவை வளர்க்க இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (பா)

# வாழ்க்கைசெலவுஉயர்வுக்கு ஈடாகசம்பள உயர்வு தேவை

## தொழிற் சங்கங்கள் கோரிக்கை

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு கட்டெண் அலகு ஒவ்வொரு அதிகரிப்புக்கும் ரூபா ஐந்தை சம்பள அதிகரிப்பாக வழங்க வேண்டும் என தொழிற் சங்கங்களின் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசாங்கம் இவ்வாறு செய்யத் தவறினால் பாரிய அளவில் வேலை நிறுத்தங்கள் மற்றும் பல தொழிற் சங்க போராட்டங்களை நடத்தப்போவதாக தெரிவித்துள்ளனர்.

# 1991இற்குப் பின்னர் அபிவிருத்தி நிதி எதுவும் யாழ்மாவட்டத்துக்கு இல்லை

1991ஆம் ஆண்டின் பின்னர் யாழ். மாவட்டத்திற்கு அபிவிருத்திக்கென பண ஒதுக்கீடு எதுவும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள சூழ்நிலை காரணமாகவே நிதி ஒதுக்கப்படவில்லை என கூறப்படுகிறது. அதேவேளை யாழ். மாவட்டத்தில் நிலவுகின்ற சூழ்நிலை நிலவுகின்ற கிளிநொச்சி மாவட்டத்திற்கு இந்நிதி 1993 வரை கிடைக்கப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. புனருத்தாரண புனர்நிர்மாண வேலைத்திட்டத்தின்கீழ் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 2.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும் உற்பத்தி எழுச்சிவாரப் போட்டியாக

மாபெரும்
மாட்டு வண்டிச்
சவாரிப் போட்டி

இடம்:
நீர்வேலி மாட்டு வண்டி சவாரித்திடல்
காலம்:
24-04-1994 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:
பிற்பகல் 2.00 மணி

மாட்டுவண்டி உரிமையாளர்கள், பார்வையாளர்கள் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

த. பொ. மே. நிறுவனம், யாழ். மாவட்டம்
(இ-9214)

தமிழீழத்தில் பதனிடப்படும் தோல் வகைகள் உங்களுக்குத் தேவையா?
இன்றே நாடுங்கள்!!

பானு பாதணி நிலையம்

புதிய பழைய பாதணிகள் தயாரிக்கவும், பம் வாசர், துருத்தி, ஆர்மோனியம், சயிக்கிள் சீற் போன்றவைகளுக்கு பயன்படுத்தும் தோல் வகைகள் எம்மிடம் உண்டு. இன்றே நாடுங்கள்!!

தமிழீழத்தில் விற்பனை செய்யப்படும் சிறந்த ஸ்தாபனம்

பானு பாதணி நிலையம்

இல. 56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,
(8104)

A/L 96

விஞ்ஞானப் பிரிவு
23 - 4 - 94 முதல்

| | |
|---|---|
| பௌதிகவியல்:- | திரு. வர்ணம் |
| இரசாயனவியல்:- | திரு. செல்வா |
| தாவரவியல்:- | திரு. ஐங்கரநேசன் |
| விலங்கியல்:- | திரு. கெங்காதரன் |
| தூய/ பிரயோக கணிதம்:- | திரு. கிருஷ்ணா |

யூனிவேர்சல்
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.

அனுமதிகள் யாவும் வெள்ளி [22.4.94] பி. ப 4 மணிக்கு வழங்கப்படும்.
[இ - 9218]

வளரும் நவநாகரிக உலகில்
மிளிரும் ஓர் அழகு அகம்!

யோகாமணி ஆடை அகம்

மங்களகரமான

திறப்பு விழா 21 - 04 - 94



# யோகாமணி ஆடை அகம்

(யோகாஸ் ஆடை அகம்)

32, லெப். கேணல் சந்தோசம் தெரு,

(கஸ்தூரியார் வீதி)

யாழ்ப்பாணம்.



புதுப்புது டிசைன்களைக் காலந்தாழ்த்தாது

அணிந்து மகிழ்ந்திட

இன்றே வாருங்கள் !

அன்புடன் அழைக்கின்றோம்.

(இ-9199)

ப. பத்மகுமாரன்

உரிமையாளர்.

நல்லூர் [illegible] நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

மனச்சான்றின் மாசை நீக்கு; அதுவே பின் அச்சத்தை அடியோடு போக்கு.

- பெஞ்சமின் பிராங்க்ளின்

ஈழநாதம்

..., மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 21-04-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் ...

தபால் பெட்டி எண் 05

## சிறிலங்காவிற்கு புதிய தொல்லை

'எல்லாளன் படை' என்னும் அமைப்பு கொழும்பில் நடத்திய தொடர் குண்டு வெடிப்புக்களும், விடுத்த எச்சரிக்கைகளும் அவர்களின் எதிர்பார்க்கைக்கு ஏற்றாற் போலவே உல்லாசப் பயணிகளினதும், மேற்கு நாடுகளினதும் கவனத்தை ஈர்த்துள்ளது இதன் வெளிப்பாடாகவே கொழும்பிலுள்ள மேற்கு நாடுகளின் இராஜதந்திரிகள் கூட்டம் ஒன்று கூட வேண்டி ஏற்பட்டதும். அதில் தமது நாட்டு உல்லாசப்பயணிகளுக்கு இலங்கையின் நிலைவரம் குறித்து அறிவுறுத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டமையும் ஆகும்.

இதன் அடுத்த அம்சமாக உல்லாசப்பயணிகள் பலர் தமது இலங்கைக்கான பயணத்தை ரத்துச் செய்துள்ளமை முக்கியமானதாகும். இது எல்லாளன் படை விடுத்த எச்சரிக்கையும், அவர்கள் நடத்திய தொடர் குண்டுவெடிப்புக்களும் உல்லாசப்பயணத்துறையை நேரடியாகப் பாதிக்கத் தொடங்கியுள்ளது எனக் கூறினும் மிகையல்ல.

உல்லாசப் பயணத்துறை சிறிலங்கா அரசாங்கத்திற்கு அந்நிய நாட்டுச்செலாவணியை ஈட்டிக் கொண்டு வரும் முக்கிய துறைகளில் ஒன்றாகும். பாரம்பரிய விவசாய ஏற்றுமதிப் பொருட்கள் தவிர்ந்த ஏனைய வெளிநாட்டு வருவாயைத் தேடிக் கொடுக்கும் துறைகளில் இது மூன்றாவது இடத்தில் உள்ளது; தைத்த ஆடைகள் ஏற்றுமதி, வெளிநாட்டு வேலை வாய்ப்பால் கிடைக்கும் வருமானம் என்பனவற்றிற்கு அடுத்து உல்லாசப் பயணத்துறையே அதிக வருமானத்தைக் கொடுக்கின்றது.

சிறிலங்காவிற்கு வருடாந்தம் சுமார் நான்கு லட்சம் உல்லாசப் பயணிகள் வருகின்றார்கள். இவர்களிடம் இருந்து 1200 மில். டாலர் அந்நியச் செலாவணியாக ஈட்டப்படுகின்றது. இது இழக்கப்படுமேதென்பது சிறிலங்காவின் பொருளாதாரத்தில் பெரும்பாதிப்பை விளைவிக்கக் கூடியவை என்பது கூறித்தான் தெரிய வேண்டும் என்பதல்ல.

அதிலும் பெரும் யுத்தச் செலவீட்டினால் சிறிலங்கா அரசாங்கம் பெரும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள வேளையில் இவ் வருமான இழப்பு ஏற்படுவதென்பது அரசிற்குப் பெருஞ்சுமைகளை ஏற்படுத்தக் கூடியதொன்றாகும். ஏற்கனவே நிதி நெருக்கடிகள் காரணமாக முதலீட்டாளர்களுக்கு வங்கிகள் வழங்கும் கடன்களுக்கு கடும் நிபந்தனைகளை விதிக்

# அமெரிக்காவில் ஒடுக்கு முறை ஓயவில்லை; குமுறிக் கொண்டிருக்கின்றார்கள் கறுப்பர்கள்

நாள் முழுக்க வேலை செய்து களைத்துப்போன ரோஸ் பார்க் வீட்டிற்கு போவதற்காக பஸ் ஸ்டாப்பிற்கு வந்தாள் நீண்ட நேரம் காத்திருந்தாள் பஸ் வருவதாகக் காணோம் கடுகடுத்த கால்கள் கெஞ்சின ஓய்வு கொடு என்று உடம்பு போராடியது அவ்வளவு சீக்கிரம் ஓய்வு கொடுத்து விட முடியாது: வீட்டுக்குப்போனாலும்அக்காடா என்று உட்காரமுடியாது ராத்திரி சாப்பாட்டிற்கு அடுப்பு மூட்டியாக வேண்டும். வேலை, வேலை, வேலையே வாழ்க்கை

ஒரு வழியாக பஸ் வந்தது. உட்கார இடமும் இருந்தது! 'இன்னிக்கு அதிர்ஷ்டம் தான்' என்று நினைத்துக் கொண்டே சீட்டில் உட்கார்ந்து ஆற அமரக் காலை நீட்டித் தடவிக் கொண்டாள் பஸ்சில் தனக்குக் கிடைத்த இடம் வரலாற்றில் தனக்கு கிடைக்கப் போகும் இடத்தின் முன்னோட்டம் என்பது அவளுக்குத் தெரியாது.

பஸ் இரண்டு நிறுத்தங்கள் தாண்டியதும் நாலைந்து வெள்ளைக் காரர்கள் பஸ்சில் ஏறினார்கள்: அவர்களுக்கு உட்கார இடம் இல்லை. ரோஸ் பார்க்கை எழுந்திருக்கச்சொல்லி கட்டளை இட்டார்கள். காரணம், அவள் ஒரு கறுப்பு மனுஷி ரோஸ் பார்க் அசையவில்லை. மிரட்டிப் பார்த்தார்கள் அவள் சீட்டை விட்டு எழுந்திருக்கவில்லை. சச்சரவு சண்டையாக முற்றியது போலிஸ் வந்து ரோஸ் பார்க்கை கைது செய்து கொண்டு போயிற்று. வீட்டிற்குப் போய் படுத்துத் தூங்கப் போகிறோம் என்று நினைத்து ரோஸ் பார்க் போலீஸ் ஸ்டேஷன் லாக்கப்பிற்குப் போனாள். காரணம், அவள் ஒரு கறுப்பர் இனத்துப் பெண்!

செய்தி பரவியது அந்த ஊரில் சமயசொற்பொழிவுகள் நிகழ்த்தும் ஒரு பாதிரியார் இருந்தார். நிறையப் படித்த மனிதர். பஸ்ஸில் நடந்த சம்பவம் அவருக்கு தென்னாபிரிக்காவை ஞாபகப்படுத்தியது! அங்கே மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்ற இந்திய பாரிஸ்டர் ஒருவரை- பின்னாளில் மகாத்மா காந்தி என்று உலகம் தலைவணங்கி நின்ற ஒருவரை-கறுப்பர் என்ற கர

இது ஏதோ கதையல்ல, வரலாறு நாற்பது வருடத்திற்கு முன்பு மார்ட்டின் லூதர் சிங் நடத்திய போராட்டம் கறுப்பின மக்களை மட்டுமல்ல அமெரிக்காவையே விழித்துக் கொள்ளச் செய்தது என்பது கதையல்ல, வரலாறு ஆனால் இன்று அது கனவாய்-பழங்கதையாய் போய்விடுமோ என்றுதான் தோன்றுகிறது காரணம், இன்னும் கறுப்பு இன மக்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள் பஸ்சில் இடம் கேட்டு அல்ல. அதிகார அமைப்பில் இடம் பிடிக்க பிடித்த இடத்தை தக்க வைத்துக் கொள்ள கல்லூரிக்குள் நுழைய- படிப்பை பாதியிலேயே விட்டு விடாமல் இருக்க.

லால் ஸ்ட்ரீட் ஜர்னல் என்பது பொருளாதார வர்த்தக விடயங்களை அலசுகின்ற ஒரு தினசரி அது ஒரு சர்வே நடத்தியது 35,242 நிறுவனங்களின் பணித்துறை பெர்சானல் டிபார்ட்மென்ட் ஆவணங்களை ஆராய்ந்தது இந்த நிறுவனங்கள் எல்லாம் பெரிய நிறுவனங்கள் இவை எல்லாவற்றிலுமாகச்சேர்த்து நான்கு கோடிப் பேர் வேலை செய்கிறார்கள் இது கிட்டத்தட்ட அமெரிக்காவில் வேலை செய்பவர்களில் 30 சதவிகிதம் (அதனால் தான் இந்தக் கணக்கு முக்கியத்துவம்வாய்ந்தது) இந்த நிறுவனங்களில் வேலை செய்து வந்த கறுப்பர்களில் 65 சதவீதம் பேர் வேலை இழந்திருக்கிறார்கள் ஏன்?

பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் தளர்ச்சி என்று இந்தக் கம்பெனிகள் காரணம் சொல்கின்றன அப்படியானால், அமெரிக்காவில் வசிக்கும் ஆசிய இனத்தவர், செவ்விந்தியர் இவர்களின் எண்ணிக்கை குறையவில்லை என்பது மட்டுமல்ல அதிகரித்தே இருக்கிறது. அது எப்படி?

நமக்கெல்லாம் இது புதிதாகத் தோன்றலாம். ஆனால் கறுப்பு இனத்தவர்களுக்கு இதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை வில்லியம் ராஸ்பெரி என்பவர் கறுப்பினப் பத்திரிகையாளர்களில் ஒருவர். வாசிங்டன் போஸ்ட் பத்திரிகையில் வாரா வாரம் கட்டுரை எழுதுகின்றபத்திரிகையாளர். அவர்சொன்னார், கறுப்பர்கள் மீது பாரபட்சம் காட்டப்படுவது இன்னமும் நடந்து கொண்டு தான் இருக்கிறது;

செலவில் ஒரு படம் எடுத்தார். அந்தப்படம் என்பது லட்சம் டாலர் சம்பாதித்தது. இப்போது மூன்றரைக் கோடி டாலர் பட்ஜெட்டில் படம் எடுத்துத் தரும்படி ஹாலிவுட்காரர்கள் அவரை மொய்த்துக் கொண்டிருக்கிறார்கள் கறுப்பு இனத்தவராக இருக்கிறோம் என்பதால் அவருக்கு ஏதாவது மனத்தடைகள் (Complex) இருக்கிறதா என்று நான் அவரிடம் கேட்டேன் அதற்குக் காரணம் உண்டு இந்த வருடம் இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்றவர் டோனி மாரிசன் என்ற பெண் எழுத்தாளர், கறுப்பினத்தவர் ''கடவுளே எனக்கு நீல நிறக் கண்களை கொடு, அப்போதாவது பார்க்கிறவர்கள் அழகானவள் என்று என்னை மதிக்கட்டும் அன்பு செலுத்தட்டும்'' என்று ஒரு கறுப்பினப் பெண் குழந்தை கடவுளிடம் வேண்டிக் கொள்கிற உருக்கமான சிறு கதையை பல வருடங்களுக்கு முன்பு அவர் எழுதியிருந்தார். அந்தக் குழந்தையின் மனநிலையில் தான் இருந்தது உண்டு என்று ஒருமுறை அவர் சொல்லியிருந்தார். அதனால் லீயிடம் கறுப்பாக இருப்பதால் உங்களுக்கு ஏதும் காம்ப்ளக்ஸ் உண்டா என்று கேட்டேன்.

'இங்கு எல்லோரும் அப்படி ஒரு மனநிலையில்தான் வளர்கிறோம் எங்கள் அடிமனத்தில் வெள்ளைக்காரர்கள் மீது வெறுப்பு வெள்ளைக்காரர்களுக்கு எங்கள் மீது வெறுப்பு என்றார் லீ இந்த வெறுப்பைப்பற்றி கூட வெறுப்பு எதையும் சாதிக்காது என்பதையும் டோனி மாரிசன் நிறையவே எழுதியிருக்கிறார். விவசாயக் கூலியான அவரது அப்பாவால் நான்கு டாலர் வாடகை கொடுக்கமுடியாமல் போன போது அவர்கள் குடும்பத்தையே வீட்டுக்குள் வைத்து உயிரோடு எரிக்க முயற்சி நடந்தது என்று அவர் சொல்கிறார் வாடகை கொடுக்கவில்லை என்பதற்காக அதுவும் நான்கு டாலர் கொடுக்கவில்லை என்பதற்காக சொந்த வீட்டையே யாராவது எரிக்க முற்படுவார்களா? அவர்கள் வீட்டை எரிக்க நினைத்தது வாடகைப் பாக்கிக்காக அல்ல நாம் கறுப்பர்கள் என்பதற்காக என்று அப்பா சொல்லுவார் என்

யது என்றால் தண்டனை கிடையாது ஆனால் பதவியும் வகிக்க முடியாது- லாங் மேல்கோர்ட்டில் முறையீடு செய்தார்- அவர் பதவிக்காலம் முடிய இரண்டு மாதம் இருக்கும் போது அவர் குற்றவாளி யல்ல என்று தீர்ப்பு வந்தது- அவர் மீண்டும் போட்டியிட முடியாது ஏனெனில் அமெரிக்காவில் எந்தப் பதவியையும் ஒருவர் இரண்டுமுறை தான் வகிக்க முடியும்

கறுப்பர்களை அதிகாரபீடத்தில் இருந்து ஒதுக்கி வைப்பதற்கு அமெரிக்கா நெடுகிலும் திரை மறைவில் சதி நடக்கிறது என்கிறார் லாங் கறுப்பினத்தவர்களில் வெற்றி பெற்றவர்களை ஆராய்ந்து பார்த்தால் அவர்களதுவெற்றிக்குப் பின்னர் ஒருபோராட்டம் இருக்கும் ரோஸ்பார்க், மார்ட்டின்லூதர்சிங், ஸ்பைக்லீ, டோனிமரிசன், ராட்னி லாங் எல்லோரும் ஒரு போராட்டத்திற்குப் பின்னர் தான் வெற்றியை அடைந்தார்கள்; ஆனால் தோற்றவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள்வளர்ந்துகொண்டே போகிறது

அமெரிக்காவிற்கு ஜலதோஷம் பிடிக்கிறது என்றால் கறுப்பினத்தவருக்கு ஜன்னி பேகண்டுவிடும் அதாவது தேசத்திற்கு சிறு பாதிப்புக்கூட எங்களுக்குப்பேரிடியாகிவிடும் இரண்டு வருடங்களாக அமெரிக்கப் பொருளாதாரத்தில் தளர்ச்சி எங்களுக்கோ அது பெரும் வீழ்ச்சி சாப்பாட்டிற்

கே கஷ்டப்படும் போது படிப்பிற்கு எங்கே போவது என்கிறார் அவர் வேலை இருந்தால் தான் வருமானம் வருமானம் இருந்தால்படிப்பு படிப்பு இருந்தால் தான் வேலை என்ற சூழலில் அமெரிக்கக் கறுப்பினம் சிக்கிக் கொண்டிருக்கிறது.

''அதுதான் சரி செய்'' என்று ஸ்பைக் லீயின் படம் ஒன்று வன்முறைதான் தீர்வு என்கிறது ஃபாரக்கான் என்று ஒருவர் கறுப்பின இஸ்லாமியர்களின் தலைவர் பரபரப்பூட்டும் கருத்துக்களை மேடை போட்டு பேசி வருகிறார் அமெரிகக் கறுப்பர்களின் துன்பங்களுக்கு யூதர்கள்தான் காரணம் என்பது அவரது சித்தாந்தம் அவருக்கு நாளுக்கு நாள் ஆதரவு பெருகுகிறது

மார்ட்டின் லூதர் சிங்கைப் போல இவரும் ஒரு மதத் தலைவர்தான் ஆனால் இவரது ஆதர்சம் காந்தி இல்லை ஹிட்லர் ''ஹிட்லர் ஒரு மகத்தான தலைவர்'' என்று இவர் பகிரங்கமாகவே பேசி வருகிறார்

இன்றைய அமெரிக்காவில் வெள்ளைக்காரர் மீது கறுப்பர்களுக்கு ஆத்திரம் கறுப்பர்களைக் கண்டு வெள்ளையருக்கு பயம் இங்கே இன்று காந்தி இல்லை ஹிட்லர் உண்டு எதிர்காலம் என்னவாகும்?

-மாலன்

நன்றி: தினமணிக்கதிர்

## ஜெருசலேமில் அரபு ஆட்சி நிலை பெறுவது அவசியம்

-ஜோர்தான் மன்னர்

ஜெருசலேமில், கிழக்கு கட்டாரப் பகுதியில் அரபுக்கள் இறைமை பெறப்படாத எந்தவொரு சமாதானதிட்டத்தையும் ஜோர்தான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்று ஜோர்தான் மன்னர் உசைன் கூறியுள்ளார்:

யூதர்கள், கிறிஸ்தவர், மற்றும முஸ்லிம்கள் அனைவருக்கும். ஜெருசலேம் ஒரு சமாதான சின்னமாக விளங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாலஸ்தீன மக்களின் வரலாற்று ரீதியான சட்டபூர்வமான உரிமைகளை அங்கீகரிக்காத எந்தவொரு திட்டத்தையும் தாம் நிராகரிக்க இருப்பதாகவும் ஜெருசலேமின் பாறை முகப்பு கோபுரத்தின் திருத்த வேலைகள் முடிவுற்றதையிட்டு ஜோர்தான் தலைநகர் அம்மானில் நடைபெற்ற வைபவத்தில் பேசும் போது அவர் தெரிவித்தார்.

## 250? பாலஸ்தீனர்கள்

டிகள் காரணமாக முதலீட்டாளர்களுக்கு வங்கிகள் வழங்கும் கடன்களுக்கு கடுமை நிபந்தனைகளை விதிக்கத் தொடங்கியுள்ளன. இதன் காரணமாக பலதொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் இன்னும் பலதொழிற்சாலைகள் மூடப்படும் அபாய நிலையில் இருப்பதாகவும் செய்திகள் வந்தவண்ணம் உள்ளன;

இதேசமயம் உல்லாசப்பயணிகளின் வருகை பாதிப்பதினால் அந்நியச் செலாவணி மட்டுமல்ல, உள்ளூரிலும் பல ஆயிரக்கணக்கானவர்கள் வேலை இழக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவது தவிர்க்க முடியாது. உல்லாசப் பயணத்துறையை நம்பி பல்வேறு தொழில் நடவடிக்கைகள் சிறிலங்காவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து பணி புரிபவர்கள் தொடக்கம் மேற்கு, தெற்கு கடற்கரையோரங்களில் உள்ள சுற்றுலா மையங்களை அண்டிய சிறு குடிசைகளில் வாழ்பவர்கள் வரை வருமானம் பாதிக்கப்படக் கூடும்,

இதேவேளை எல்லாளன் படையின் எச்சரிக்கையை வெளிநாட்டு முதலீட்டாளர்களும் கருத்திற் கொள்வார்களேயானால் சிறிலங்காவின் பொருளாதாரம் மீட்சி பெற முடியாத பாதாளத்தில் தள்ளப்படுவது தவிர்க்க முடியாது; ஆனால் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் உல்லாசப் பயணிகள் போன்று கருத்திற்கொள்வது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். ஏனெனில் எச்சரிக்கையின்படி தாக்குதல்கள் நடக்குமாயின். அது அவர்களின் மூலதனத்திற்கும், உயிர்களுக்கும் பாதுகாப்பற்ற நிலையைத் தோற்றுவித்து விடக் கூடும்,

தற்பொழுதே பயணிகள் வரவில் வீழ்ச்சிகாணத் தொடங்கியுள்ளமை உல்லாசப்பயணத்துறையில் குறிப்பாக ஹோட்டல் துறையில் பெரும் முதலீடு செய்துள்ள வெளிநாட்டு முதலீட்டாளருக்குப் பெரும் பாதிப்புக்களை உருவாக்கத் தொடங்கியிருக்கும்; அதேவேளை, அவர்களுக்கு தம் மூலதனம் குறித்து அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கும்; இந்நிலை தொடருமானால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெருமளவில் பாதிக்கப்படுவதும் இதன் விளைவாக அவர்கள் சிறிலங்காவைவிட்டு ஒதுங்குவதும் தவிர்க்க முடியாது போகும்.

இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் 'எல்லாளன் படை' என்பது புதிய அறியப்படாத பெயராகவே இருக்கின்றது; அதன் நடவடிக்கையானது எத்தனை தூரம் செல்லும், எந்தளவிற்குச் செல்லும் என்பதும் அறியப்படாததாகவே உள்ளது; ஆனால் இவ் அமைப்பு தெரிவிப்பது போன்றே அதன் நடவடிக்கை அமையுமானால் சிறிலங்காவின் பொருளாதாரத்திலும், அதைத் தொடர்ந்து அரசியலிலும் கணிசமான தாக்கத்தை விளைவிக்கும் என்பதில் சந்தேகமில்லை,

உலகம் தலைவணங்கி நின்ற ஒருவரை-கறுப்பர்என்ற காரணத்திற்காக ரயிலில் இருந்து வெளியே தூக்கிப் போட்டதும் அவர் அதை எதிர்த்துப் போராடியதும் நினைவிற்கு வந்தது இந்தக் கறுப்புப் பாதிரியும் காந்தியைப் போல போராடத் தீர்மானித்தார் அதாவது கத்தியின்றி, ரத்தமின்றி, ஆம் அகிம்சை வழியில், காந்தியின் பாணியில் 'புறக்கணிப்பு போராட்டம்' அறிவித்தார் கறுப்பர்கள் தங்களுக்கு நீதி கிடைக்கும் வரை பஸ்சில் ஏறக்கூடாது அவற்றைப் புறக்கணிக்க வேண்டும் என்று அமைப்புக் கொடுத்தார். இதெல்லாம் நடக்கிறவிஷயம் இல்லை என்று பலர் நினைத்தார்கள். காரணம் பஸ்சில் போகவில்லை என்றால் வேலைக்கு நடந்து தான் போக வேண்டும்; ஏனெனில் கறுப்பர்களில் பலபேரிடம் கார் கிடையாது; அவர்கள் ஏழைகள்.

ஆனால் அந்த ஏழைகள் நடக்கிற விஷயத்தை செய்தார்கள்; ஆம் வேலைக்கு நடந்து போகத் துவங்கினார்கள் ஒரு நாள் அல்ல- இரு நாள் அல்ல- 381 நாட்கள் நாளாக நாளாக போராட்டம்தளர்ச்சி காணவில்லை. மாற கவலுப் பெற்றது, காரணம், கறுப்பு இனத்தவர்கள் கூட்டமாக நடக்கத் துவங்கினார்கள். சைக்கிளில் போகத் துவங்கினார்கள் சொந்தமாக டாக்சி ஓட்டிப் பிழைத்துக் கொண்டிருந்த கறுப்பின டாக்சி டிரைவர்கள் ஓசியில் கறுப்பின மக்களை ஏற்றிக் கொண்டு போய் வேலை செய்கிற இடத்தில்இறக்கிவிட்டார்கள் இதனால் எல்லாம் அவர்களிடையேதோழமைவளர்ந்தது. தனித்தனி நபர்களாகத் தங்களைக் கருதிக் கொண்டிருந்தவர்கள் இப்போது தங்களை ஒரு சமூகமாக உணரத் தலைப்பட்டனர். அதனால் போராட்டம் வலுப்பெற்றது. கடைசியில் வென்றது.

மது பாரபட்சம் காட்டப்படுவது இன்னமும் நடந்து கொண்டு தான் இருக்கிறது; வேண்டுமென்றே சில சமயம் பல நேரங்களில் அந்த எண்ணத்தோடு பலர் செயல்படுவது இல்லை என்று வைத்துக் கொண்டாலும் கூட நிகர விளைவு என்னவோ அது தான். அவர் ஒரு உதாரணமும் சொன்னார் ஒரே வயது ஒரே தகுதி, ஒரே அளவு அனுபவம் உள்ள வெள்ளைக்காரர் ஒருவரும், கறுப்பர் ஒருவரும் வேலைக்கு மனுப்போட்டால் வெள்ளைக்காரனைத் தான் நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கின்றன என்பது தான் அந்த உதாரணத்தின் சாராம்சம்.

நிறுவனங்களில் உள்ள அதிகாரிகளிடம் பேசினால் 'தரம்' திருப்திகரமாக இருப்பதில்லை என்று குறைப்பட்டுக் கொள்ளுகிறார்கள். இந்த தரம் என்ற வாதத்தை நாம் மண்டல் பிரச்சினை பற்றி எரிந்த போது இந்தியாவில் நிறையவே கேட்டோம்.

ஸ்பைக் லீ என்று ஒரு சினிமா டைரக்டர் இருக்கிறார். அவர் மாணவராக திரைப்படக் கல்லூரியில் இருந்த போது எடுத்த படத்திற்கு அந்த ஆண்டின் சிறந்த பட விருது கிடைத்தது. தொழில் நுட்பம், கலைத் தேர்ச்சி, விஷய ஞானம் கொண்டவர் என்று பத்திரிகைகள் விமர்சனங்கள் எழுதின. அவர் கறுப்பர் தான் அவர் எங்கள் பல்கலைக் கழகத்திற்கு வந்திருந்தார். ''கறுப்பர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதை ஏற்றுக் கொள்ள இந்த தேசம் தயாராக இல்லை'' என்று சொன்னார் ''இன்னமும் எல்லோருடைய அடி மனத்திலும் ஆண்டான். அடிமை மனப்பான்மையின் மிச்சசொச்சங்கள் நட்டுக் கொண்டு இருக்கின்றன'' என்கிறார்; ''எனக்குப் பரிசு கிடைத்தது ஆனால் அதற்குப் பிறகும் படங்கள் கிடைக்கவில்லை'' நிறைய கஷ்டத்திக்குப்பிறகு 13ஆயிரம்டாலர்

பார்கள் என்பதற்காக என்று அப்பா சொல்லுவார் என்னால் அதை நம்பமுடியவில்லை என்கிறார் டோனி மாரிசன்

ஆனால் கறுப்பர்கள் என்பதற்காகத்தான் பழிவாங்கப் படுகிறோம் என்றுநம்புகிறவர்கள் பலர் இருக்கிறார்கள் அவர்களில் ஒருவர் ராட்னி லாங்

கெயின்வில் நகர கமிஷனர்களில் ஒருவர். சிட்டி கமிஷனர் என்பது மேயர் போன்றஒரு பதவி; ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு நாலு வருடகாலம் பணியாற்றி மக்களிடம் அவருக்கு நல்ல பெயர் இரண்டாம் முறையும் தேர்ந்து எடுக்கப்பட்டார்

இரண்டாம் முறை தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாதங்களில் லஞ்ச ஊழல் என்று சொல்லி அவரைப் பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கி வைத்திருந்தார்கள். மத்திய அரசு அதிகாரிகள் வந்துஆறுமாதம் அவரது அலுவலகத்தைக் குடைந்து பார்த்தார்கள் அவர் மீது வழக்குப் போட வேண்டிய காலக்கெடு நெருங்கிக்கொண்டே வந்தது வழக்கு போடுகிற நேரத்தில் லஞ்ச ஊழல் அல்ல போதை மருந்து கடத்தினார் என்று வழக்குப் போட்டார்கள் இங்கு நீதி மன்றங்களில் ஜூரி சிஸ்டம் அதாவது நம்மூர் பஞ்சாயத்துப்போல-சில குடிமக்களும்(ஜூரர்கள் என்று பெயர்) நீதிபதியோடு சேர்ந்து வழக்கை விசாரிப்பார்கள் குற்றவாளியா இல்லையா என்று தீர்ப்பு சொல்வார்கள் குற்றவாளி என்றால் என்ன தண்டனை என்று நீதிபதி தீர்ப்பு வழங்குவர்; லாங் வழக்கில் ஜூரர்கள் அத்தனை பேரும் வெள்ளைக்காரர்கள் நீண்ட விசாரணைக்குப் பிறகு லாங் தவறு செய்தாரா இல்லையா என்று தங்களால் ஒரு முடிவுக்குவரமுடியவில்லை என்று ஜூரர்கள் சொன்னார்கள்- இந்த மாதிரி முடிவாகி

# 2500 பாலஸ்தீனர்கள் விடுவிக்கப்படுவர்

(கெய்ரோ)

காஸா ஜெரிக்கோ பகுதிகளில் உள்ள இஸ்ரேலியத் துருப்பினரை மீளப் பெறுவது தொடர்பாக பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திய பின்னர் இஸ்ரேலினால் சிறைபிடிக்கப்பட்ட 2500க்கும் அதிகமான பாலஸ்தீன கைதிகள் விடுதலை செய்யப் படுவதற்கு இஸ்ரேல் இணக்கம் தெரிவித்துள்ளது;

இதுபற்றி தெரிவித்தபாலஸ்தீனிய விடுதலை இயக்க அதிகாரி மேலும் கூறுகையில் கைதிகளை விடுதலை செய்யுமாறு நாம் வற்புறுத்தி வருகிறோம். ஏனெனில் பாலஸ்தீனியர்களுக்கும், இஸ்ரேலியர்களுக்குமிடையே சமாதானம் ஏற்படுவதற்கு நாம் முயற்சி செய்கிறோம் எனத் தெரிவித்தார்;

# ஐ. நாவின் தடையினால் 6 லட்சம் பேர் மரணம்

(பாக்தாத்)

ஈராக்கிற்கு எதிராக ஐ நா அமுல்படுத்தி வரும் பொருளாதாரத் தடையினால் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் கூட இல்லாமல் ஈராக் மக்கள் பெரும் துன்பப் படுவதாக ஈராக் அரசின் நல்வாழ்வுத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

அது மேலும் தெரிவிக்கையில் இந்த தட்டுப்பாடுகளால் இது வரையில் ஆறு லட்சம் பேர் வரை பலியாகி இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

ஐ நா. பாதுகாப்பு சபை தனக்கு எதிராக கடைப்பிடித்து வரும் பொருளாதாரத் தடை விலக்கப் படுவதற்கு உலக நாடுகள் குறிப்பாக அரபு நாடுகள் முயற்சியெடுக்க வேண்டும் என்று ஈராக் அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

# இந்தியப் படகுகளில் 450 தினமும் அத்துமீறுகின்றன

(சென்னை)

ஒவ்வொரு நாளும் சுமார் 450 இந்தியப் படகுகள் சிறிலங்காக் கடலில் அத்துமீறிப் பிரவேசிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது இது தொடர்பாக சென்னையில் ஒரு மகாநாடு நடத்தப்பட்டது இந்த மகாநாட்டில் இந்திய கடற்படை மற்றும் கடலோரக் காவல் படை அதிகாரிகள், தமிழ் நாடு மீன்பிடித் திணைக்கள அதிகாரிகள், வெளியுறவு அமைச்சு அதிகாரிகள், கொழும்பில் இந்திய உயர் ஸ்தானிகராக இருந்து இளைப்பாறிய ஒருவரும் கலந்து கொண்டனர்.

பாக்கு நீரிணைப் பகுதியில் இரு நாட்டு மீனவர்களும் மீன் பிடிக்க வசதிகள் செய்யப்பட வேண்டும் என்று கடல் சட்ட அதிகாரிகள் மகாநாட்டில் ஆலோசனை வழங்கியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முச்சக்கர மிதிவண்டி ஓட்டுநர்

## தேவை

மேற்கூறிய வெற்றிடத்திற்கு தகுந்த ஓட்டுநர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 24-04-94 அன்று இளைஞர் செஞ்சிலுவைச் சங்க முதலுதவி நிலையம் நுணாவில் சாவகச்சேரி அலுவலகத்தில் நேர்முகப் பரீட்சைக்கு முற்பகல் 10.00 — 12.00 வரை நேரில் வரவும்.

செயலாளர்

இ. செ. ச. சாவகச்சேரி பிரிவு

(இ-9222)

மயிலங்காடு

ஞானமுருகன் விளையாட்டு கழகத்தால்

நடாத்தப்படும்

## மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

ஆரம்பம்: 22 - 4 - 94 வெள்ளி

இடம்: உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானம்.

நேரம்: தினமும் மாலை 3 மணி முதல்

பங்குபற்றும் கழகங்கள்

அ. பிரிவு

1. றோயல் வி. க. ஊரெழு
2. ஆர். டீ. வி. வி. க. மல்லாகம்
3. யங்கென்றீஸ் வி. க. இளவாலை
4. சென். ஸ்ரார் வி. க. சேரப்பாய்

ஆ. பிரிவு

1. சென் சேரிஸ் வி. க. நாவாந்துறை
2. சில்வஸ்ரார் வி. க. மானிப்பாய்
3. திருமலை நட்சத்திர வி. க. இணுவில்
4. அம்பாள் வி. க. நீவகம்

இ. பிரிவு

1. விநாயகர் வி. க. அளவெட்டி
2. ஜுபிலி வி. க. அரியாலை
3. மானத்தை வி. க. அராலி
4. அறிவொளி வி. க. ஆனைக்கோட்டை

ஈ. பிரிவு

1. சென் அன்ரனீஸ் வி. க. பாஷையூர்
2. யங் றோயல் வி. க. கே. கே. எஸ்.
3. ஸ்கந்தா ஐ. வி. க. சுன்னாகம்
4. பொற்பதி வி. க. கொக்குவில்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஞானமுருகன் விளையாட்டு கழகம்

21-04-94 மயிலங்காடு (இ-9218)

## மரண அறிவித்தல்

# தமிழக எதிர்க்கட்சித் தலைவர் காலவரையறையற்ற உண்ணாவிரதம்

(சென்னை)

சட்டப்பேரவையில் ஜனநாயக முறையில் இயங்கும் வாய்ப்பு தமக்கு மறுக்கப்படுவதாக கூறி தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் உட்பட ஏழு காங்கிரஸ் உறுப்பினர்கள் மெரீனா கடற்கரையில் நேற்று காலவரையறையற்ற உண்ணாவிரதம் இருந்தனர்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிக்குமாறு சட்டப்பேரவையில் தமிழக அரசு நிறைவேற்றிய தீர்மானம் தப்பித்துக் கொள்ளும் போக்கே வெளிப்படுகிறது இல்லை என எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் செய்தியாளர்களிடையே பேசுகையில் குற்றஞ்சாட்டினார். தடையை நீடிப்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் எதையும் மத்திய அரசுக்கு மாநில அரசு வழங்கவில்லை இவ்விடயத்தை காங்கிரஸ் அரசியலாக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

இதேவேளை உண்ணாவிரதம் இருக்கும் காங்கிரஸ் உறுப்பினர்களை மத்திய அரசு காப்பாற்ற வேண்டும் என ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

## கரபந்தாட்டப் போட்டி

கரபந்தாட்ட போட்டியின் இறுதி நாள் நிகழ்வு இன்று 3 மணிக்கு பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக திரு. இ. வேலாயுதம் அவர்கள் கலந்து கொள்கின்றார்.

## அதிபர்களுக்கான கூட்டம்

(நல்லூர்)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் 27-4-94 புதன்கிழமை பி. ப. 2.00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ளது. மேற்படி தொடர்பாக ஆராயப்பட உள்ளதாக சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த. துரைசிங்கம் தெரிவித்துள்ளார். (17 )

## பயிலுநர் ஆசிரியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை

சகல நல்லூர்/யாழ்ப்பாண சாதாரண பயிலுநர் ஆசிரியர்களும் 27-04-1994 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர்/யாழ்ப்பாணக் கோட்ட அலுவலகத்திற்கு நியமனத்திற்குரிய ஆவணங்களுடன் தவறாது சமுகமளிக்கவும் தொலைக் கல்வி பயிற்சி நெறி சம்பந்தமான பரீட்சை தகவல்களையும் எடுத்துவருமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவில்

## 20 அமையத் தொழிலாளர் நியமிக்க அனுமதி

யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவில் சுமார் 20 அமையத் தொழிலாளர்களை நியமிக்க வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இவர்களுக்கான இவ் அனுமதியை தற்சமயம் யாழ்ப்பாணம் வந்துள்ள வட கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வழங்கி அதற்கான உத்தரவையும் பிறப்பித்துள்ளார்.

மேலும் யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவில் உள்ள ஏனைய வேலை வெற்றிடங்கள் தொடர்பான பட்டியலையும் பணிப்பாளர் தம்முடன் எடுத்துச் செல்லவுள்ளார்.

இப்பட்டியலை வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு எடுத்துச் செல்லும் இவர் அங்கிருந்து கொழும்பு சென்று சுகாதார அமைச்சிடம் சமர்ப்பிப்பார் என தெரிய வருகிறது. (பா). (ச)

## விஷவாயு கொள்கலன் விசாரிக்க இன்டர்போல்

கொழும்பு துறைமுகத்தில் கண்டெடுக்கப்பட்ட விஷவாயு தயாரிக்கும் இரசாயனப் பொருள் கொண்ட நான்கு சிலிண்டர்கள் குறித்து துப்பறிய சர்வதேச பொலிசான இன்டர்போலின் உதவியை சிறிலங்கா அரசு நாடியுள்ளது.

இந்த சிலிண்டர்கள் பம்பாய் நகரிலிருந்து இஸ்ரேல் செல்லும் வழியில் கொழும்பு நகரில் பிடிபட்டமை தெரிந்ததே.

## சிறிலங்கா அரசு மீது சர்வ. அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசின் அண்மைக்கால மனித உரிமைகள் மீறல் குறித்து ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமை மாநாட்டில் காரசாரமாக கண்டிக்கப்பட்டதென கொழும்பு மாவட்ட பாராளுமன்ற ... தெரிவித்தார்.

மேற்படி மாநாட்டிற்கு நீதிபதி திலக் மாற பெருமாள் தலைமையிலான தூதுக் குழு சென்றது எனவும் அம்மாநாட்டில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து முழு விபரத்தையும் தந்துதவுமாறும் பாராளு...

# சாவகச்சேரி மருத்துவமனை தரமுயர்த்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மருத்துவமனை தரமுயர்த்தப்பட உள்ளது. போதனா மருத்துவ மனைக்கு 8 மைல்களுக்கு அப்பால் உள்ள மருத்துவ மனைகளை தரமுயர்த்துவது என்ற வகையில் இம் மருத்துவமனை தரமுயர்த்தப்பட உள்ளதாக தெரியவந்துள்ளது.

மேற்படி மருத்துவமனை தரமுயர்த்தப்படுவதனால் குறைந்தது 25 டாக்டர்கள் அம்மருத்துவமனையில் பணிபுரியும் நிலைமை ஏற்படுவதோடு சகல துறைகளையும் கொண்ட நிபுணர்களின் தேவையும் அம்மருத்துவமனையில் கிடைக்கும் நிலையும் ஏற்பட உள்ளது. இதேவேளை இம்மருத்துவமனையில் தற்போது ஒரேயொரு டாக்டர் மட்டுமே கடமையில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வஜன

எது. ஜனாதிபதியின் பிரகடனம் நேற்று முன்தினம் கொழும்பில் வெளியிடப்பட்டது.

நல்லூர் மத்தியமறுமலர்ச்சிக் கழக சனசமூக நிலையம்,

ஸ்புட்ணிக் விளையாட்டுக் கழகம்

நடாத்தும்

40வது ஆண்டு நிறைவு விழா

காலம் 22.04.94 வெள்ளி - 23.04.94 சனிக்கிழமை

இடம்: நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை மைதானம்

முதலாம் நாள் நிகழ்ச்சிகள்

22.4.94 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணி

பிரதம விருந்தினர்

திரு. சி. தியாகராஜா (பிரதிப்பணிப்பாளர் வி. ப யாழ். வளாகம்)

சிறப்பு விருந்தினர்

திரு. பொ. வேந்தன் (பொறுப்பாளர், வட்டச் செயலகம் நல்லூர்)

கௌரவ விருந்தினர்

திரு. இராசா வாமதேவன் (இராசா டீசல் இன்ஜினியேர்ஸ்)

ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் - கழகக்காப்பாளர்

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

23 - 4 - 94 சனிக்கிழமை மாலை 6-45 மணி

"இராமசாமி ஐயர் அரங்கு"

பிரதம விருந்தினர்:

திருமதி க. சிவசிதம்பரம் (பிரதேச செயலர், நல்லூர்)

சிறப்பு விருந்தினர்:

எல். இளங்கோ (உதவிப் பிரதேச செயலர், நல்லூர்)

அன்பரசன் (கலை பண்பாட்டுக்கழகம் த. வி. பு. யாழ். மாவட்டம்.)



## இராசையா தங்கச்சிப்பிள்ளை (ஆச்சி)

யாழ்/போதனா வைத்தியசாலை முன்னை நாள் பெண் பரிசாரகரும், வண்ணார்பண்ணை இன்பம் வீதியைச் சேர்ந்தவருமான இராசையா தங்கச்சிப்பிள்ளை 19-4-94 அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற குப்புக்குட்டி இராசையாவின் மனைவியும் வடமலர், ஜெகராயா, ஜெகதீசன், ஜெயகுமாரி, ஜெகநாதன், ஜெகரூபன் காலஞ்சென்ற ஜெ சிலகிருஷ்ணன் (இன்பம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ச. தர்மலிங்கம், மா. கந்தசாமி ஜெ தெய்வானை, ஜெ தவமணி, ஜெ. பிறேமாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் தவப்பிரியா, உஷாந்தி, செந்தூரர யன், நிரோஜினி, கிரோசன், துர்க்கா, ஜனனி, கிருஸ்ணா, சுபந்தன், சஜீவன், இன்பசீலி, தமிழ் அரசி ஆகியோரின் பேத்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக 21-4-94 இன்று காலை 10 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மருமக்கள், பிள்ளைகள்.

இல. 10 இன்பம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(8101)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

...தமிழர்களாகவே இருப்பதால் அவர்கள் தென்பகுதிக்கே விருப்பத்தின் பேரில் நியமிக்கப்படுகின்றனர். குறைந்த புள்ளிகளைப் பெறுபவர்கள் சிங்களவர்களாக இருப்பதால் அவர்களே வடக்கு கிழக்கிற்கு நியமிக்கப்படுகின்றனர். இதன்போது அவர்கள் வடக்கு - கிழக்கு செல்ல மறுத்து தென்பகுதியிலேயே நியமனம் கோருகின்றனர். சட்டப்படி இவர்களது விருப்பத்திற்கு மாறாக அனுப்ப முடியாததால் அரசு தென்பகுதியில் நியமனம் வழங்குகிறது. இதனால் தெற்கில் ஒவ்வொரு வைத்தியசாலைகளிலும் மேலதிக டாக்டர்கள் இருக்கிறார்கள். ஆனால் வடக்கில் டாக்டர்களே இல்லாத நிலை காணப்படுகிறது.

இதனை நிவர்த்தி செய்வது தமிழ் டாக்டர்களின் கைகளிலேயே உள்ளது. இதற்கு அரசிடம் கையேந்துவதில் பலனில்லை. எனவே இதனை நிவர்த்தி செய்ய யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் டாக்டர்களை ஒரு வருடத்திற்கு அங்கேயே கடமை சேவை செய்யுமாறு பணிக்கவேண்டும் என்றார்.

(ச,பா)

### நெடுங்கேணியில்

பிள்ளை சண்முகலிங்கம், கற்குடா வீதி, வாழைச்சேனை, மட்டக்களப்பு) எனும் போராளி வீரச்சாவு அடைந்தார். வீரச்சாவு அடைந்த இப் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

**யாழ் ஸ்ரீதர் திரையரங்கில்**

தினசரி 2, 30, 6, 00
சனி, ஞாயிறு 10, 30, 6 00

**மதுரைவீரன்**

சனி, ஞாயிறு 2, 30

**ஒளிவீச்சு**

(கி|9182)

...நடைபெற்ற ... மாநாட்டில் காரசாரமாக கண்டிக்கப்பட்டதென கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில்

### புத்தளம

இறது.

இவ்வாறு வெளியேறியவர்களின் இடங்களில் முழுமையாக சிறிலங்கா படையினர் இருப்பதாகவும் பத்தனம் உண்டு என்ற திவு பகுதியில் சுமார் நூற்றி இருபத்தைந்து பொலிசார் இருப்பதாகவும் அங்கு மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை குதிரைமலை பகுதியில் சிறிலங்கா கடற்படையினருக்கு சொந்தமாக ஒரு பீரங்கிப்படகும், ரோந்துப் படகுகள் இரண்டும் நிறுத்தப்பட்டு தயார் நிலையில் இருப்பதாகவும் கடற்பகுதியில் காணப்படும் மீன்பிடி படகுகளை நிர்மூலமாக்கவே இவ்வாறு இப்படகுகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

(நி)

### மேதின

...ற்சங்க உத்தியோகத்தர்களையும், கூட்டுறவுச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், வர்த்தக சங்கங்கள், அரச, தனியார் நிறுவனங்களின் தொழிற்சங்கங்களின் உத்தியோகத்தர்கள், அரச தனியார் கல்வி நிறுவனங்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி அழைக்கப்படுகிறார்கள்.

### தொண்டமனாறு

சென்ற கடற்படையினர் குடியிருப்புகள் மீது 50 கலிபர் தாக்குதலை நடத்தியவாறு ரோந்து சென்றனர். அதே சமயம் தெல்லிப்பளை புன்னாலைக்கட்டுவன் ஆகிய பகுதிகள் மீது நேற்று அதிகாலை 3 மணியளவில் உலங்கு வானூர்தி வட்டமிட்டு தேடுதல் நடத்தியது.

(போ)

...சென்றது எனவும் அம்பாந்தோட்டையில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து முழு விபரத்தையும் தந்துதவுமாறும் பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

விசேடமாக எம்பிலிபிட்டியவில் 37 மாணவர்கள் காணாமல் போனது, சூரியகந்த எலும்புக் கூடு விவகாரம் தொடர்பாக சர்வதேச அமைப்புக்கள் கேள்விக்கணை தொடுத்ததாகவும், இதற்கு கட்சி சார்பற்ற விசாரணை மேற்கொள்ளப்படும் என உறுதியளிக்கப்பட்டதாகவும் அறிகிறேன். ஆனால் அரசாங்கம் இதுவரை அப்படியொன்றையும் செய்யவில்லை. எனவே இது குறித்த முழுவிபரமும் அறிவிக்கப்படவேண்டும் என நிமால் சிறிபால டி சில்வா கோரினார்.

### புலிகள்

ஒரு தனிச் சட்டத்தைக் கொண்டுவந்தாலும் அது தமிழ்நாடு மாநிலத்துக்கு மட்டும்தான் பொருந்தும் என்றும் ஜெயலலிதா கூறினார்.

இந்த விவாதத்தின் போது மத்திய அரசையும் இந்தியப் பிரதமரையும், உள்துறை அமைச்சரையும் அவர் கடுமையாக தாக்கிப் பேசினார்.

### பனிச்சங்

கவும் இதன்போது 14 படையினர் படுகாயமடைந்து பொலநறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மூன்று பஸ் வண்டிகளில் சென்றுகொண்டிருந்த நூறுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் மீது இக்கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பஸ்ஸிலிருந்து சுமார் இருபது மீற்றருக்கு முன்னால் கண்ணிவெடி வெடித்ததாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

எல். இளங்கோ (உதவிப் பிரதேச செயலர், நல்லூர்)

அன்பரசன் (கலை பண்பாட்டுக்கழகம் த. வி. பு. யாழ். மாவட்டம்.)

திருமதி சத்தியலக்ஷ்மி காங்கேயன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்)

கௌரவ விருந்தினர்:

திரு. என். சண்முகலிங்கன்
(சி. விரிவுரையாளர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

## கலை நிகழ்ச்சிகள்

இரு வீணை இசை:
செல்விகள்: வைரம்பியா சிவநாதன்
ஸ்ரீஜேகா விநாயகமூர்த்தி
மிருதங்கம்: செல்வன் இ. திருநாவுக்கரசன்

கவிதை வாசித்தல்:
(சமூகச் சிறுமி) செல்வி யோசப்குமார் தமிழினி

குறத்தி நடனம்: (கழகச் சிறுமிகள்)
செல்விகள் சோ. சுமதி, க. மதிவதனா
ம. அபர்ணா, ச. மேனகா

நாடகம்: ''மாற்றம் வேண்டும்''
ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகம்

வில்லுப்பாட்டு: ''வெளிநாடு வேண்டுமா?''
மத்திய வில்லிசைக் குழு
ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகம்
எழுச்சிப் பாடல் அபிநயம்,
கழகச்சிறுமிகள்

செல்விகள்: சோ. சுமதி, க. மதிவதனா, ம. அபர்ணா
த. தயாளினி, ச. மேனகா, சிந்துஜா
சு. விஜயதர்ஷினி

திரு. வே. யோகேஸ்வரன் ஆதரவில்
சுதேசிய கலாமன்றம் வழங்கும்
''ஆவியில் இனியவளே''

நல்லூர் மத்திய மறுமலர்ச்சிக்கழக
மாதர் சங்கம் வழங்கும்
''காத்தவராயன்''

தயாரிப்பு: செல்விகள் தே. நிர்மலாதேவி
சோ. சுகந்தி

அன்பளிப்பு:

**அஜந்தாஸ் பிடவை மாளிகை**

54, பெரிய கடை யாழ்ப்பாணம்

(8110)